**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி**
**OS.79/2016 . நாள்.16.10.2024**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. நசீம் பேகம் அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | அன்பு | **வயது** | 38 |
| **த/பெ. க/பெ.** | சின்னசாமி | **மதம்** | |
| **முகவரி** | ஜிங்கல்கதிரம்பட்டி | **தொழில்** | விவசாயம் |

**<u>வா.சா.1 ஆஜர். 1 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

வழக்கு சொத்து என்னுடையது என்று கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வேறு என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் போலி பத்திரம் பன்னியதாகவும் கூறியுள்ளேன். வழக்கு சொத்தானது சுருட்டையனுக்கு பாத்தியப்பட்டதாகும். வழக்கு சொத்துகள் மற்றும் பிற சொத்துக்களில் எனக்க 4—ல் ஒரு பங்கு பாகம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனது தாத்தா சுருட்டையன் என்கிற சின்னசாதி அனைத்து சொத்துக்களையும் எனக்கே எழுதி வைத்துள்ளார். எனது தகப்பானர் பெயரில் சிட்டா, பட்டா ஏற்ப்படவில்லை. வழக்குரையில் 4—காவது பத்தியில் வழக்கிடை சொத்துக்களை 2—ம் பிரதிவாதியும், வாதிகளின் தகப்பானர் வழி பாட்டனாரும் பொதுவாக ஆண்டு அனுபவித்து வந்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி இருவரும் கடந்த 07.07.2023 ஆம் தேதி போச்சம்பள்ளி சார்பதிவக ஆவண எண்.722/2003 படி அ—அட்டவணை சொத்துக்களை எனக்கு வழங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். அதேப்போல் ஆவணஎண்.723/2003ன் படி ஆ—அட்டவணை சொத்துக்களை தானசெட்டில்மென்ட் ஆவணம் மூலம் 2—ம் வாதிக்கு வழங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். அதேப்போல் அதே தேதியில் ஆவண எண்.724/2003 ன் படி 3—ம் வாதிக்கு இ—அட்டவணை சொத்துக்களை தானசெட்டில்மென்ட் மூலம் வழங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களில் எனது தகப்பனார் வழி பாட்டனார் ஆன சுருட்டைகான் என்ற சின்னசாமி மற்றும் எனது தகப்பனார் 2—ம் பிரதிவாதி ஆகியோர்கள் எங்களுக்கு பிதுராஜ்ஜித வாய்மொழி பாகமூலமாக பாத்தியப்பட்ட அடியில் குறிப்பிட்ட சொத்துக்கள்

என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி சொத்துக்களை நாங்கள் தற்போது தனித்தனியாக அனுபவித்து வருகிறோம் என்று சொன்னால் ஒன்றாக தான் அனுபவித்து வருகிறோம். தாவா சொத்துகளுக்கான வருவாய் ஆவணம் வாதிகள் பெயரிலான எங்கள் பெயரில் உள்ளது. மேற்படி சொத்துக்களை தனித்தனியாக பிரித்து வரப்பு அமைத்து அனுபவித்து வருகிறோம் என்று சொன்னால் தனியாக அனுபவித்து வருகிறோம். அவ்வாறு தனியாக அனுபவித்து வருவதால் தான் மேற்படி ஆவணத்தில் அ, ஆ, இ என தனித்தனியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது தாத்தா சுருட்டைகான் என்ற சின்னசாமி கடந்த 2006 அல்லது 2007 ஆம் ஆண்டு இறந்தார். தாவா சொத்தின் பட்டா கூட்டாக உள்ளது என்று சொன்னால் எங்கள் பெயரில் தான் உள்ளது. எவ்வாறு கூட்டு பட்டா ஏற்ப்பட்டது என்று சொன்னால் அது தவறுதலாக ஏற்ப்பட்டது. பட்டா எண்.162ல் கூட்டாக பட்டா ஏற்ப்பட்டுள்ளது என்று சொன்னால் எங்கள் பெயரில் தான் உள்ளது. அதை மனு கொடுத்து மோசடியாக ரத்து செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பானர் 23.07.2010 –ல் ஆவண எண்.2889/2010–ல் 1–ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கிரைய பத்திரமானது கைமாறாக பணம் பெற்றதை வைத்து பாண்டு எழுத வேண்டும் என்ற சொல்லி பத்திரத்தில் கையொப்பம் பெற்று கொண்டேன் என்றும் கிரையம் செய்த விவரம் எனக்கு தெரியாது என்று வழக்கிற்க்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. ரவிச்சந்திரனிடம் மேற்படி கிரையபத்திரத்தை நான் பற்றி கேட்கவில்லை. எனது தகப்பனாருக்கு தானம் எழுதி கொடுக்க எவ்வாறு உரிமை உள்ளதோ அதேப்போல் ரவிச்சந்திரனுக்கும் உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய

பரிகாரத்தில் வழக்கு சொத்துக்கள் பெயரில் 2-ம் பிரதிவாதி 1-ம் பிரதிவாதிக்கு 23.07.2010 தேதியிட்டு ஏற்படுத்தியுள்ள ஆவண எண்.2889/2010 கிரைய பத்திரம் செல்லதக்கதல்ல என்று கேட்டுள்ள நிலையில் மேற்படி பத்திரத்தில் கண்ட சொத்துக்களை வழக்கில் காட்டியுள்ளேனா என்றால் காட்டியுள்ளேன். நான் அவ்வாறு அந்த பத்திரத்தில் கண்ட சொத்துக்களை வழக்கு சொத்துக்களில் குறிப்பிடப்படவில்லை என்றும் எனவே எனக்கு அந்த பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

SHANMUGANATHAN District Munsif cum Judicial Magistrate
Digitally signed by SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.